துருசவிய நிதியம்

நிதி அமைச்சு



வருடாந்த அறிக்கை - 2020

உள்ளடக்கம்

துருசவிய நிதியத்தின் தொலைநோக்கு மற்றும் பணிக்கூற்று	05
நிறுவன தகவல்கள்	06
தவிசாளரின் செய்தி	07
பணிப்பாளரின் செய்தி	08
நிறுவன செயற்பாடுகள்	09
துருசவிய நிதியத்தின் முகாமைத்துவ சபை	10
துருசவிய நிதியத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு	
துருசவிய நிதியத்தின் ஆளணி	11
துருசவிய நிதியத்தின் தலைமை அலுவலகத்தின் செயற்பாடுகள்	12
பிராந்திய அலுவலகங்களில் நிறைவேற்றப்படும் முதன்மை சேவைகள்	13
இறப்பர் பயிர்ச்செய்கை பரந்து காணப்படும் மாவட்டங்கள் - துருசவிய நிதியம்	14
துருசவிய நிதியத்தின் முன்னேற்ற மீளாய்வு	15-19
துருசவிய சங்க அங்கத்தவர்களுக்கான பயிற்சிகள் வழங்குதல் மற்றும் வளப்பங்கீடு	21-24
இறுதி கணக்கறிக்கை 2020	25-39
கணக்காய்வாளர் நாயக அறிக்கை 2020	40-44

தொலைநோக்கு

இலங்கையின் முதற்தர
அந்நிய செலாவணியை உழைக்கும்
கைத்தொழிலாக தேசிய இறப்பர் கைத்தொழிலை
மாற்றுதல்.

பணிக்கூற்று

இறப்பர் கைத்தொழிலின் உற்பத்தி திறனையும் தரத்தினையும்
மேம்படுத்துவதன் மூலம் சிறு தோட்ட இறப்பர் உரிமையாளர்களின்
பொருளாதார நிலைமையை உயர்த்த நடவடிக்கை எடுப்பதோடு
தேசிய இறப்பர் கைத்தொழிலை வலுப்பெற செய்து அவர்களை நாட்டின்
அபிவிருத்திக்கு பங்காளராக்குதல்.

துருசவிய நிதியத்தின் விழுமியங்கள்

மகிழ்ச்சி
ஒற்றுமை
பாதுகாப்பு
ஊழியர் திருப்தி
நற்பண்பு

நிறுவன தகவல்கள்

நிறுவனத்தின் பெயர் - துருசவிய நிதியம்

சட்டபூர்வ தன்மை

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் முழுமையான உரிமையுள்ள நிறுவனமாகும்.

அமைச்சு - நிதி அமைச்சு

பதிவு செய்யப்பட்ட அலுவலகம் - துருசவிய நிதியம்
இல. 39, ஸ்ரீ சுபதிபுர
பத்தரமுல்லை.

தொலைபேசி
- தவிசாளர் 011-2863937
- பணிப்பாளர் 011-2863936
- பொது 011-2863786
- தொலைநகல் 011-2863786
- மின்னஞ்சல் thurusaviya2000@gmail.com
- இணையத்தளம் http://thurusaviya.gov.lk

தவிசாளரின் செய்தி

"நாட்டை கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு" புதிய அரசாங்கத்தின் கொள்கை மற்றும் துருசவிய நிதியத்தின் நோக்கத்திற்கு அமைவாக 2020 ஆம் வருடத்தில் துருசவிய நிதியம் எதிர்வு கூறிய அபிவிருத்தி செயற்றிட்டங்களில் பாரியளவான முன்னேற்றத்தை அடைந்துள்ளதென்பதை உங்களுக்கு மிக பெருமையுடன் அறியத்தருகின்றேன். இவ்வெற்றியை எனது பணிக்குழாம் அடைந்து கொண்டது கடந்த வருடத்தில் காணப்பட்ட கொவிட்-19 தொற்று காரணமாக ஏற்பட்ட பல்வேறுபட்ட சவால்களை மிக நேர்த்தியாக கையாண்டமையாலாகும். இவ்வுலக தொற்று சூழ்நிலையிலும் சிறு இறப்பர் தோட்ட உரிமையாளர்களை கவனித்து கொள்வதற்கு எனது பணிக்குழாம் தொடர்ந்தேர்ச்சியாக அர்ப்பணிப்புடன் செயற்பட்டமையை மிக மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.

நாடு பூராகவும் பரந்து காணப்படுகின்ற சிறு இறப்பர் தோட்ட உரிமையாளர்களின் பிரச்சினைகளை கண்டறிந்து அவற்றிற்கு வினைத்திறனாகவும் திறம்படவும் தீர்வினை வழங்கியமை மேற்கூறிய வெற்றியை அடைவதற்கு வாய்ப்பு ஏற்பட்டதென்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் துருசவிய நிதியத்தின் மூலம் சிறு தோட்ட உரிமையாளர்களின் பொருளாதார மற்றும் சமூக வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்காக 2020 ஆம் வருடத்திலும் பல்வேறு செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இவ்வனைத்து செயற்பாடுகளுக்கும் வழிகாட்டி, தொடர்ச்சியாக நான் உள்ளிட்ட எனது ஆளணியை ஊக்கப்படுத்திய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கௌரவ பிரதமர் மற்றும் நிதியமைச்சர் மகிந்த ராஜபக்ஷ அவர்களுக்கும் நிதியமைச்சின் செயலாளர் உள்ளிட்ட ஆளணியினருக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

அத்துடன், எமது நிறுவனத்தை நேரடி கண்காணிப்பு செய்து "விசேட அபிவிருத்தி செயற்றிட்டங்கள்" மேற்கொள்ள நிதி ஒதுக்கீடுகளை வழங்கிய பெருந்தோட்ட அமைச்சர் கௌரவ ரமேஷ் பதிரண அவர்களுக்கும் அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட ஆளணியினருக்கும், பெருந்தோட்ட இராஜாங்க அமைச்சர் கௌரவ கனக ஹேரத் அவர்களுக்கும் பெருந்தோட்ட இராஜாங்க அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட ஆளணியினருக்கும், ஏனைய சக நிறுவனங்களான இறப்பர் அபிவிருத்தி திணைக்களம், இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம், தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம், இறப்பர் செயலகம் உள்ளிட்ட அனைத்து நிறுவன ஆளணியினருக்கும், துருசவிய நிதியத்தின் பணிப்பாளர் குழாமிற்கும், அனைத்து மாவட்ட துருசவிய சங்க தவிசாளர்கள், செயலாளர்கள் உள்ளிட்ட அனைத்து சங்க உறுப்பினர்களுக்கும், எனக்கு ஊக்க சக்தியை வழங்கிய துருசவிய ஆளணியினருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

"சுபீட்சத்தின் நோக்கு" அரச கொள்கை மூலம் புதிய அபிவிருத்தி செயற்றிட்டங்களை இறப்பர் துறையின் வளர்ச்சிக்காக செயற்படுத்தி, சிறு இறப்பர் தோட்ட உரிமையாளர்களை பாதுகாத்து கொண்டு முன்நோக்கிய நீண்ட பயணமொன்றை மேற்கொள்ள துருசவிய நிதியத்திற்கு வலிமையும் தைரியமும் கிடைக்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

.....

விஜித லொகுநாரங்கொட


தவிசாளர்

பணிப்பாளரின் செய்தி

கடந்த காலங்களை விட புதிய தோற்றப்பாட்டுடன் பெருந்தோட்ட துறையின் முன்னேற்றத்திற்கு சவால்களை எதிர்கொள்வதற்காக இறப்பர் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள சிறு தோட்ட இறப்பர் உரிமையாளர்களுக்கு புதிய வழிமுறைகள் மூலம் பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் ரீதியாக அவர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காக பௌதீக மற்றும் நிதி வளங்களை வழங்கி உற்பத்தியாளர்களை ஊக்கப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம் என மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம்.

இறப்பர் துறையின் வளர்ச்சிக்கு தேவையான செயற்பாடுகளை திட்டமிட்டு பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் ரீதியாக விளைச்சலை இலாபகரமானதாகவும், நிலைபேறாக உயர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சிறு இறப்பர் தோட்ட உரிமையாளர்களுக்கு அவர்களின் அபிலாசைகளை அடையவும் இறப்பர் செய்கையில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் சிறந்ததொரு சேவையை வழங்குவதும் துருசவிய நிதியத்தின் எதிர்பார்ப்பாகும். அதனடிப்படையில் இந்நிறுவனம் இலாபத்தை அடையும் நோக்கிலன்றி சிறு இறப்பர் தோட்ட உரிமையாளர்களின் உற்பத்திகளின் திறனை அதிகரிப்பதன் ஊடாக அவர்களின் சமூக, பொருளாதார நிலைமைகளை உயர்த்துவதற்காக உதவியுறும் வகையில் கடினமாக உழைக்கும் ஒரு நிறுவனம் என்று கூறுவது பொருத்தமானது. இவ்வருடத்தில் இறப்பர் பயிர்ச்செய்கையின் முன்னேற்றத்திற்கான விசேட வேலைத்திட்டமான பால் அறுவடை உதவியாளர்களை பயிற்சியளிக்கும் செயற்றிட்டத்தை ஆரம்பித்ததன் மூலம் உற்பத்தி திறனை அதிகரித்துக் கொள்வதற்கும், எதிர்வரும் வருடங்களில் அடைய எதிர்வு கூறப்பட்டுள்ள இலக்கை அடைந்து கொள்வதற்கும், பெருந்தோட்ட துறையின் புதிய அபிவிருத்தி முன்னேற்றத்தை அடைந்து கொள்ளமுடியும் எனவும் நினைக்கின்றேன்.

நிலைபேறான அபிவிருத்திக்காக தொழில்நுட்ப மற்றும் விஞ்ஞான பூர்வமான அறிவை வழங்கி விரிவாக்கல் சேவைகளின் மூலம் சிறு தோட்ட இறப்பர் உரிமையாளர்களை விஞ்ஞான பூர்வமான உற்பத்தியாளர்களாக்குதல் மற்றும் தேசிய பொருளாதாரத்தை உயர்த்துவதற்காக வியர்வை மற்றும் உழைப்பை வழங்கி இறப்பர் பயிர்ச்செய்கைக்காக தம்மை அர்ப்பணிக்கும் சிறு இறப்பர் தோட்ட உரிமையாளர்களின், வாழ்க்கையை நிலைபேறடைய செய்ய சேவையாற்றிய எமது சகோதர நிறுவனமான இறப்பர் அபிவிருத்தி திணைக்களம்,இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் நிறுவன வளர்ச்சிக்காக வழிகாட்டல்களை வழங்கி உந்து சக்தியாக விளங்கிய பெருந்தோட்ட அமைச்சர், செயலாளர் உள்ளிட்ட ஆளணியினரின் ஒத்துழைப்புகளுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்வதற்கு இதை சந்தர்ப்பமாக பயன்படுத்திக்கொள்வதோடு இலங்கை இறப்பர் உரிமையாளர்களுக்கு துருசவிய நிதியம் பலமாக அமைய வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.



சட்டத்தரணி கலாநிதி காஞ்சன சில்வா

பணிப்பாளர்

துருசவிய நிறுவனத்தின் செயற்பாடுகள்

துருசவிய நிதியம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் 2000 ஆண்டின் 23ஆம் இலக்க துருசவிய நிதிய சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட கூட்டுத்தாபனமாகும். இது இல. 39, ஸ்ரீ சுபதிபுர பத்தரமுல்லை எனும் இடத்தில் அமைந்துள்ளது.

இந்நாட்டு இறப்பர் கைத்தொழில் மூலம் உழைக்கப்படுகின்ற அந்நிய செலாவணியில் 68%மானவை உழைக்கப்படுவது சிறு இறப்பர் உரிமையாளர்களினாலாகும். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் இயற்கை இறப்பருக்கு காணப்படும் கேள்வியானது அதிகரித்து செல்லும் தன்மை காணப்படுகிறது.

சிறு இறப்பர் உரிமையாளர்களின் உற்பத்திகளின் தரத்தை உயர்த்தி சந்தை வாய்ப்புகளை அதிகரிப்பதன் மூலம் தேசிய மட்டத்தில் அவர்களை வலுப்பெற செய்தல் துருசவிய நிதியத்தினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடாகும். களுத்துறை, கேகாலை, குருநாகல், மாத்தளை, கண்டி, இரத்தினபுரி, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, கொழும்பு, கம்பஹா, மொனராகலை, பதுளை, அம்பாறை மாவட்டங்களில் கிராமிய மட்டங்களில் பரந்து காணப்படும் சிறு தோட்ட இறப்பர் உரிமையாளர்களை ஒன்றிணைத்து ஆரம்ப துருசவிய சங்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அவ் ஆரம்ப துருசவிய சங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்தி களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி, காலி மற்றும் கொழும்பு போன்ற மாவட்டங்களில் 5 பிராந்திய துருசவிய சங்கங்கள் (மாவட்ட அமைப்பு) உருவாக்கப்பட்டுள்ளன. பிராந்திய துருசவிய சங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்தி இலங்கை சிறு தோட்ட இறப்பர் அபிவிருத்தி சங்க சம்மேளனம் உருவாக்கப்பட்டுள்ளது.

துருசவிய நிதிய சட்டத்திற்கமைய துருசவிய நிதியம் உருவாக்கப்பட்டதன் நோக்கம்

(அ) சிறு தோட்ட இறப்பர் உரிமையாளர்களுக்கு சேமிப்பு பழக்கத்தை துண்டுதல் மற்றும் அவர்களது சமூக, பொருளாதார நிலைமையை மேம்படுத்தல்

(ஆ) இறப்பர் கைத்தொழில் சார்பான முக்கிய முதலீடுகளை மேம்படுத்தல்

(இ) சிறு தோட்ட இறப்பரின் அறுவடையை உற்பத்தி பொருளாக மாற்ற தேவையான இறப்பர் பால் பதனிடல் மற்றும் இறப்பர் தொழிற்சாலை, ஏனைய வசதிகளை பெற்றுக்கொள்ள மேம்பாடுகளை மேற்கொள்ளல் அல்லது உருவாக்கல்

(ஈ) இறப்பர் பதனிடல் பிரிவுகளில் அல்லது கைத்தொழிற்சாலைகளில் உற்பத்தி விற்பனையை மேம்படுத்தல்

(உ) சிறு தோட்ட இறப்பர் அபிவிருத்தி சங்கங்களை(துருசவிய சங்கம்) பதிவு செய்தல்,சீரமைத்தல்,நிதியத்தில் பதிவுப்பெற்ற சங்க உறுப்பினர்களுக்கு உதவிக் கொடுப்பனவுகளை வழங்குதல்

(ஊ) சிறு தோட்ட இறப்பர் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களின் வளர்ச்சி மற்றும் நன்மைக்காக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

துருசவிய நிதியத்தின் மூலோபாய அபிவிருத்தி நோக்கங்கள்

01. உயர் தரத்திலான உற்பத்திகளை வழங்குதல்.
02. சுற்றாடல் பாதுகாப்பின் மூலம் நிலைபேறான அபிவிருத்தியை ஏற்படுத்தல்.
03. சிறு தோட்ட இறப்பர் உரிமையாளர்களின் உற்பத்திகளுக்கு நியாயமான விலை வழங்கல்.
04. சிறு தோட்ட இறப்பர் உரிமையாளர்களின் சமூக, பொருளாதார வாழ்க்கை தரத்தை உயர்த்துதல்.

துருசவிய நிதிய முகாமைத்துவ சபை – 2020

திரு. விஜித் லொகுநாரங்கொட	தவிசாளர், துருசவிய நிதியம்
திரு. ஜே.எம். மங்களதிஸ்ஸ	உறுப்பினர் (பணிப்பாளர் நாயகம், இறப்பர் அபிவிருத்தி திணைக்களம்)
திருமதி. எச்.ஏ.டீ. ருக்ஷானி	கண்காணிப்பாளர், (பிரதி பணிப்பாளர், நிதி அமைச்சு)
திரு. மகிந்த விதானபதிரன	உறுப்பினர் (தவிசாளர், சி தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகாரசபை)
திரு. பீ.டீ.டி.எஸ் பெரேரா	உறுப்பினர் (பிரதம கணக்காளர், பெருந்தோட்ட அமைச்சு)
திரு. டீ.டீ கே சந்திரகீர்த்தி	உறுப்பினர் (தவிசாளர், இலங்கை இறப்பர் தோட்ட அபிவிருத்தி சங்க சம்மேளனம்)
திரு. ரோஹன கலபட	உறுப்பினர் (தவிசாளர்,களுத்துறை பிராந்திய துருசவிய சங்கம்)
திரு. பியசேன மஹஆராச்சி	உறுப்பினர் (தவிசாளர், காலி பிராந்திய துருசவிய சங்கம்)
திரு. பீ.பி சம்பத் பிரேமரத்ன	உறுப்பினர் (தவிசாளர், கேகாலை பிராந்திய துருசவிய சங்கம்)
திரு. தினேஸ் மகிந்த	உறுப்பினர் (தவிசாளர், இரத்தினபுரி பிராந்திய துருசவிய சங்கம்)
திருமதி. ஜே. எஸ் விக்ரமரத்ன	உறுப்பினர் (தவிசாளர்,கொழும்பு பிராந்திய துருசவிய சங்கம்)

துருசவிய நிதிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு – 2020

திரு ஜே.எம் மங்களதிஸ்ஸ	பணிப்பாளர் நாயகம், இறப்பர் அபிவிருத்தி திணைக்களம்
திருமதி. எச்.ஏ.டீ. ருக்ஷானி	பிரதி பணிப்பாளர், நிதி அமைச்சு
திரு. பீ.டீ.டி.எஸ் பெரேரா	பிரதம கணக்காளர், பெருந்தோட்ட அமைச்சு
திரு. பீ.பி சம்பத் பிரேமரத்ன	தவிசாளர், கேகாலை பிராந்திய துருசவிய சங்கம்
திருமதி நிலானி ஜயசிறி	கணக்காய்வு அதிகாரி, (கணக்காய்வாளர் திணைக்களம்)

துருசவிய நிதியம் - ஆளணி

தவிசாளர்	திரு. விஜித் லொகுநாரங்கொட
பணிப்பாளர்	திரு. சட்டத்தரணி கலாநிதி காஞ்சன சில்வா
கணக்காளர்	திரு. ஜே.பீ.பீ.வி. பண்டார
நிர்வாக உத்தியோகத்தர்	திருமதி. சமன்மலி மாத்தரகே
மேம்படுத்தல் உத்தியோகத்தர்	திரு. டிலான் தரங்க குணவர்தன
முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் (தொழில்நுட்ப)	திரு. ஏ.வி.பீ. குணரத்ன
முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்	திருமதி. ஆர் தெஹிபிடிய
(தொழில்நுட்பம் அல்லாத)	திருமதி. எல்.ஏ.பீ சந்திரிக்கா திருமதி. ஐ.எச்.டீ.ஜ மதுஷானி திருமதி. ஐ.கே முனசிங்க திரு. பீ.கே குமார செல்வி. மல்ஷானி செனவிரத்ன திருமதி. எஸ். வி. டி. ப்ரியங்கிகா செல்வி. எல்.பீ தத்சரனி செல்வி. டீ.எம்.எம். குமாரிஹாமி திருமதி. என். டீ. ராஜபக்ஷ திரு. கே.ஏ. சத்துரங்க திருமதி. கே.டப்ளிவ்.எம். பிரியதர்ஷனி திருமதி. ஆர்.எம்.ஏ ரத்னாயக திரு. டப்ளிவ்.ஆர். எஸ்.டப்ளிவ் பண்டார திரு. டப்ளிவ்.எஸ்.என். சேனாநாயக திருமதி. பீ.பீ.பே.என்.சேனாநாயக்க திரு. கே.கே.என்.சந்தருவன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பெருந்தோட்ட அமைச்சு) திரு. டீ.டீ ஜயசுரிய (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பெருந்தோட்ட அமைச்சு)
சாரதிகள்	திரு. யு. லால் பிரியந்த திரு. சிவந்த உதயங்க
அலுவலக உதவியாளர்கள்	திரு. பிரசன்ன சமரதுங்க திரு. தம்மிக விஜேசிறி

துருசவிய நிதிய தலைமை அலுவலகத்தின் செயற்பாடுகள்

- 2000 ஆம் ஆண்டு இலக்கம் 23 ஆம் துருசவிய நிதிய சட்டத்திற்கமைய வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை நடைமுறைப்படுத்தல்.

- கீழ் மட்டத்தில் பரந்து காணப்படும் சிறு தோட்ட இறப்பர் உரிமையாளர்களை ஒன்றிணைத்து அவர்களை அறியப்படுத்தி துருசவிய சங்கங்களை அமைத்தல்.

- உருவாக்கப்பட்ட துருசவிய சங்கங்களை துருசவிய நிதியத்தின் கீழ் பதிவுச்செய்தல்.

- சிறு தோட்ட இறப்பர் உரிமையாளர்களின் மேம்பாட்டிற்காக உருவாக்கப்பட்டுள்ள துருசவிய சங்க உறுப்பினர்களுக்கு சேவைகளை வழங்குதல்.

- உயர்தரத்திலான இறப்பர் சீட்களை தயாரிப்பதற்கு தேவையான தொழில்நுட்ப அறிவினை வழங்கல்.

- சிறந்த முகாமைத்துவத்தினை கொண்ட சங்கத்தின் உறுப்பினர் மற்றும் பொருளாதார முக்கியத்துவம் தொடர்பாக சிறு தோட்ட இறப்பர் உரிமையாளர்களை தெளிவூட்டல்

- சிறு தோட்ட இறப்பர் உரிமையாளர்களுக்கு கடன் திட்டங்களை அறிமுகப்படுத்தி செயற்படுத்தல்.

- அமைச்சு மற்றும் ஏனைய நிறுவனங்களில் இறப்பர் பயிர்ச்செய்கையை மேம்படுத்துவதற்காக கிடைக்கும் முன்மொழிவுகள் மற்றும் வினாக்களுக்கு விரைவாக பதில் வழங்குதல்.

- நிர்வாகம் மற்றும் கணக்கீட்டு நடவடிக்கைகள்

பிராந்திய அலுவலகங்களில் மேற்கொள்ளப்படும் முதன்மையான சேவைகள்

மாவட்ட கடமைகளுக்காக துருசவிய ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் ஒவ்வொரு மாவட்டங்களிலும் பிராந்திய மட்டங்களில் உள்ள துருசவிய சங்க மேற்பார்வைக்காக கீழ் கூறப்படும் கடமைளை மேற்கொள்கின்றனர்.

- ❖ எதிர்கால வேலைத்திட்டங்களை ஒவ்வொரு மாதமும் பிரதான அலுவலகத்திற்கு அனுப்பி, அனுமதிக்கப்படும். அவ் எதிர்கால வேலைத்திட்டங்களில் மாற்றம் மேற்கொள்ளப்படுமாயின் அம்மாற்ற வேலைத்திட்டங்களும், அம்மாத இறுதியில் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் தொடர்பான அறிக்கையும் பிரதான அலுவலகத்திற்கு அனுப்பி அது தொடர்பான மீளாய்வு மற்றும் அடுத்துவரும் மாதத்தில் மேற்கொள்ளவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பான ஆலோசனைகளை பெற்று அதனடிப்படையில் செயற்படல்.
- ❖ மூன்று மாதங்களுக்கு ஒரு முறை நடாத்தப்படும் பொதுச் சபை கூட்டங்களில் பங்குப்பற்றுதல்.
- ❖ துருசவிய சங்க மேற்பார்வை அறிக்கையை பிரதான அலுவலகத்திற்கு அனுப்புதல்.
- ❖ கிராமிய மட்டத்தில் புது துருசவிய சங்கங்களை உருவாக்கல்.
- ❖ செயலிழந்து காணப்படும் துருசவிய சங்க செயற்பாடுகளை இயங்கு நிலைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.
- ❖ விவசாயிகளின் பிரச்சினைகளை பிரதான அலுவலகத்திற்கு அனுப்பி அதற்கான தீர்வினை பெற்றுக்கொள்ளல்.
- ❖ நிர்வாகத்தை நடாத்துதல்.
- ❖ கடன் திட்டங்களை அறிமுகப்படுத்தி அது தொடர்பாக சிறு தோட்ட இறப்பர் உரிமையாளர்களை தெரிவுபடுத்தல்.
- ❖ மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களில் கூட்டு பதப்படுத்தல் நிலையங்களை உருவாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- ❖ கூட்டு பதப்படுத்தல் நிலைய சந்தை வாய்ப்பினை உருவாக்கல்.

இறப்பர் பயிர்ச்செய்கை பரந்து காணப்படும் மாவட்டங்கள்



துருசவிய நிதியத்தின் முன்னேற்ற மீளாய்வு

2020 ஆம் ஆண்டு வரை துருசவிய சங்கங்களின் பரம்பல்

தொடர் இல	மாவட்டம்	மொத்த சங்கங்களின் எண்ணிக்கை
01	களுத்துறை	199
02	கொழும்பு	21
03	கம்பஹா	19
04	இரத்தினபுரி	106
05	காலி	47
06	மாத்தறை	21
07	அம்பாந்தோட்டை	04
08	கேகாலை	213
09	கண்டி	13
10	மாத்தளை	01
11	குருநாகல்	11
12	மொனராகலை	122
13	அம்பாறை	35
14	பதுளை	04
	மொத்தம்	**816**

துருசவிய சங்கங்களின் வலுப்படுத்தலுக்கும் மீள்கட்டமைப்பிற்கும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்

- பொதுச் சங்க கூட்டம், சங்க கூட்டம், மாவட்ட அமைப்பு, அகில இலங்கை ரீதியாக அமைப்புகளை நிறுவுதல்.
- இறப்பர் சீட் கொள்வனவு செய்யும் நிலையங்களை உருவாக்க நிதியுதவிகளை வழங்கல்.
- இறப்பர்களை கொள்வனவு செய்யும் தனியார் நிறுவனங்களை தொடர்புபடுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- இலங்கை வங்கியுடன் இணைந்து கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

2020 ஆம் வருடத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்கள்

உறுப்பினர்களின் எண்ணிக்கை	உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன் தொகை
4	ரூபா 925,000.00

புதிய இறப்பர் பால் அறுவடை உதவியாளர் பயிற்சி செயற்றிட்டம் (2020)

மாவட்டம்	இடம்
கேகாலை	மாவட்ட ஆலோசனை அலுவலகம்
இரத்தினபுரி	கொடகவெல சணச கூட்ட மண்டபம்
மொனராகலை	கும்புக்கனை இறப்பர் ஆராய்ச்சி நிலையம்
அகலவத்தை	நிவித்திகல காட்டு இறப்பர் ஆராய்ச்சி நிலையம்

நிதி ஒதுக்கீடு - பெருந்தோட்ட அமைச்சு
ஒருங்கிணைப்பு மற்றும் செயற்படுத்தல் - துருசவிய நிதியம்
வள பங்களிப்பு - இலங்கை இறப்பர் ஆராய்ச்சி ஆலோசனை சேவை திணைக்களம்
கிடைத்த நிதி - ரூபா மி 4,964,852.22
செலவு - ரூபா மி 3,226,292.33 (2020.12.31 திகதிக்கு)

- 7 வேலைத்திட்டங்களை மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதற்கான நிதிச் செலவானது ரூபா மி 7.5 ஆகும். இருப்பினும் எதிர்பாராத கொவிட் - 19 நிலைமை காரணமாக அதில் 04 வேலைத்திட்டங்களை மட்டும் நடாத்தி முடிக்கப்பட்டுள்ளன.


2020 ஆம் வருடத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்றிட்டங்கள்

1. வருடாந்த செயற்றிட்டத்திற்கமைய நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்றிட்டங்கள்

- மானிய அடிப்படையில் நீர் ரோல், டயமன்ற்ரோல் மற்றும் அலுமினிய தட்டுகளை வழங்குதல்
  ரோல் ஜோடிகள் - 88
  இயற்கை இறப்பர் காலணிகள் - 1600
  தலைக்கு அணிய கூடிய மின்விளக்கு - 1600

- பயிற்சிகள் நடாத்துதல்
  பயிற்சிகள் - 34
  இதுவரை தெளிவூட்டப்பட்டுள்ள சங்க உறுப்பினர்கள் - 1618

2. புதிய தொழில்நுட்பத்துடனான ஒரு நாளில் உலர வைக்கும் கூடாரம் மற்றும் பாரம்பரிய புகைவீடுகள் அமைத்தல்.



துருசவிய நிதியத்தின் பணிப்பொறுப்புகள்

முழு நிறுவனத்தினதும் பொறுப்பு

இறப்பர் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள இலட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி அவர்களது உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி அதன் மூலம் தன்னிறைவு பெற்ற மக்கள் சமூகமொன்றை கட்டியெழுப்பி தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்புச் செய்வது எமது நிறுவனத்தின் நோக்கமாகும். இறப்பர் பயிர்ச்செய்கையின் அபிவிருத்திக்காக சிறு இறப்பர் உரிமையாளர்களுக்கு மிகச் சிறந்த சேவையினை வழங்கும் நோக்கில் மாவட்ட மட்டங்களில் கீழ் பிராந்திய அலுவலகங்களை நிறுவி ஒருங்கிணைப்பு அலுவலர்களை நியமித்து செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சுருக்கமாக எங்கள் பயணப் பாதை பற்றி...

- இறப்பர் பால் அறுவடை உதவியாளர்களை பயிற்றுவிப்பதன் மூலம் இறப்பர் விவசாயிகளை பலப்படுத்தல்.
- இறப்பர் பயிர்ச்செய்கை, இறப்பர் பால் வெட்டுதல் மற்றும் விஞ்ஞான ரீதியாக பசளையிடல் தொடர்பாக பயிற்சிகளை நடாத்துதல்.
- சிறு தோட்ட இறப்பர் உரிமையாளர்களுக்கு ஆர். எஸ். எஸ். இல. 01 இறப்பர் சீட் உற்பத்தி தொடர்பில் பயிற்சிகள் வழங்கல்.
- மழை கவசம் இடுதல் தொடர்பான பயிற்சி வழங்கல்.
- வளங்களை பகிர்ந்தளித்தல் - நீர்ரோல், டயமன்ற்ரோல், இயற்கை இறப்பர் காலணிகள் மற்றும் தலையில் அணியும் மின்விளக்குகளை மானிய அடிப்படையில் விவசாயிகளுக்கு வழங்குதல்.

பெருந்தோட்ட அமைச்சு
2020 ஆம் வருடத்தின் துருசவிய நிதிய நிறுவனத்தின் முன்னேற்ற மீளாய்வு
நிறுவனத்தின் பெயர் - துருசவிய நிதியம்

இலக்கம்	செயற்றிட்டம்	மதீப்பீட்டு பெறுமதி ரூபா மி	நிதி இலக்கு ரூபா மி	நிதி முன்னேற்றம் ரூபா மி	பௌதீக இலக்கு	பௌதீக முன்னேற்றம்
01	வளப்பங்கீடு					
	ரோல் சோடி மானியம்	3.030	3.03	3.146	88 100% ரோல் சோடி	88 100% ரோல் சோடி
	காலணிகள் தலையில் அணியும் மின் விளக்குகள்	3.300	3.300	3.435	1600 100%	1600 100%
02	சங்கங்களை அமைத்தல் மற்றும் பலப்படுத்தல்					
	நிறுவப்பட்டுள்ள சங்கங்களை பலப்படுத்தி செயற்படுத்த நடவடி-க்கை மேற்கொள்ளல் மற்றும் தேவைக்கேற்ப புதிய சங்கங்களை நிறுவுதல்	0.670	0.670	0.681	795 சங்கங்கள் 100%	583 சங்கங்கள் 75%
	தெளிவூட்டல் மற்றும் பயிற்சிகள் மாவட்ட மட்டத்தில் நடாத்துதல்	0.520	0.520	0.528	37 பயிற்சிகள் 100%	37 பயிற்சிகள் 100%
03	வேறு					
	அலுவலக தளபாடங்கள், கணினிகள் மற்றும் ஏனையவை	0.110	0.110	0.10094	100%	100%
	ஊழியர்களின் விருப்பத்துக்கு அமைய பயிற்சிகளை நடத்துதல்	0.275	0.275	0.285	100%	100%
	3. கடந்த வருடத்திற்கான ரோல் ஜோடிகளுக்கான கொடுப்பனவு செய்வதற்காக ஒதுக்கப்பட்ட நிதி	4.200	4.2	4.265	100%	100%
	4.கூட்டு பதப்படுத்தல் நிலையங்களை உருவாக்குதல்	0.250	0.250	0.240	100%	100%

2020 ஆம் வருடத்தில் செயற்படுத்தப்பட்ட விசேட செயற்றிட்டங்கள் (2020.12.31 திகதிக்கு)

	செயற்றிட்டம்	மதிப்பீட்டு பெறுமதி ரூபா மி	நிதி இலக்கு ரூபா மி	நிதி முன்னேற்றம் ரூபா மி	பௌதீக இலக்கு	பௌதீக முன்னேற்றம்
01	புதிய தொழில்நுட்பத்திலான ஒரு நாள் பால் பதனிடலை சிறு இறப்பர் தோட்ட உரிமையாளர்களுக்கு வழங்குதல். (குறிப்பு 01)	15.159	15.159	10.701	107	70
	இறப்பர் பால் அறுவடை உதவியாளர்களை பயிற்சியளிக்கும் செயற்றிட்டம் (குறிப்பு 2)	7.500	7.500	4.965	380 செயற்றிட்ட பயனாளிகள்	159 செயற்றிட்ட பயனாளிகள்

குறிப்பு

- புதிய தொழில்நுட்பத்திலான ஒரு நாள் பால் பதணிடலை சிறு இறப்பர் தோட்ட உரிமையாளர்களுக்கு வழங்கும் செயற்றிட்டத்திற்காக கிடைத்த நிதி ஒதுக்கீடு ரூபா 10.705 மட்டுமே. அதில் 10.701 செலுத்தப்பட்டுள்ளது. அத்துடன் 2019 ஆம் வருடத்தில் நிர்மாணப் பணிகள் பூர்த்திச் செய்யப்பட்ட 22 புகையிடும் அறைகளுக்காக நிதி ஒதுக்கீடானது இவ்வருடத்தில் சங்கங்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது.
- கொவிட்-19 நிலைமை காரணமாக திட்டமிடப்பட்ட படி முன்னேற்றத்தை அடைய முடியவில்லை.

இறப்பர் பால் அறுவடை உதவியாளர்களை பயிற்சியளிக்கும் செயற்றிட்டத்திற்காக கிடைத்த ரூபா மி 4.965 நிதி ஒதுக்கீட்டில் இன்று வரை அனைத்து கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (எதிர்பாராத கொவிட் -19 நிலைமை காரணமாக இதில் 4 வேலைத்திட்டங்களை திட்டமிட்டப்படி முடிவுறுத்த முடிந்தது. முடிவுறுத்த முடியாமல் போன ஏனைய 3 சிறு வேலைத்திட்டங்கள் 2021 ஆம் வருடத்தில் துருசவிய நிதிய செயற்றிட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படவுள்ளது.)

ஒதுக்கீடு					செலவு (மொத்த செலவு) 31.12.2020						
மூலதனம்		நடைமுறை		முழு ஒதுக்கீடு ரூபா மி	மூலதனம்			நடைமுறை			முழு செலவீனம்
DF ரூபா மி	GF	DF ரூபா மி	GF		நிதி இலக்கு ரூபா மி	நிதி முன்னேற்றம் (DF) ரூபா மி	GF	நிதி இலக்கு (DF) ரூபா மி	நிதி முன்னேற்றம் (DF) ரூபா மி	GF	ரூபா மி
12.355	**-**	**30.025**	**-**	**42.38**	**12.355**	**12.671**	**-**	**30.025**	**26.2140**	**-**	**38.885**

துருசவிய சங்க உறுப்பினர்களுக்காக பயிற்சிகள் வழங்கல் மற்றும் வளப்பங்கீடு 2020

துருசவிய சங்க உறுப்பினர்களுக்கு
பயிற்சிகளை வழங்குதல் மற்றும் வளப் பங்கீடு -2020

தொ. இல	மாவட்டம்	திகதி	இடம்	பயிற்சிகள்	உறுப்பினர் எ/கை
1	மொணராகலை	03/12	கரதகம சமூக நிலையம்	இறப்பர் பயிர்ச்செய்கை, பால் வெட்டுதல் மற்றும் விஞ்ஞான ரீதியாக பசளையிடும் முறை தொடர்பிலான பயிற்சிகள்	51
2	கேகாலை	3/13	பானகமுவ விகாரை	இறப்பர் பயிர்ச்செய்கை, பால் வெட்டுதல் மற்றும் விஞ்ஞான ரீதியாக பசளையிடும் முறை தொடர்பிலான பயிற்சிகள்	58
3	கேகாலை	3/13	அரன்தர துருசவிய சங்க செயலாளரின் வீட்டில்	ஆர் எஸ்.எஸ். இல 01 இறப்பர் சீட் உற்பத்தி தொடர்பான பயிற்சிகள்	62
4	இரத்தினபுரி	07/06	மேற்கு மதுன்கொடுவ சமூக நிலையம்	சீலன்ட் கம் கலவை உற்பத்தி மற்றும் மழை கவசம் பொருத்துதல் பயிற்சிகள்	72
5	இரத்தினபுரி	07/07	ஹெவாயின்ன சமூக நிலையம	சீலன்ட் கம் கலவை உற்பத்தி மற்றும் மழை கவசம்பொருத்துதல் பயிற்சிகள்	54
6	இரத்தினபுரி	07/29	நெந்துரன துருசவிய சங்க செயலாளரின் வீட்டில்	காலான் வளர்ப்பு தொடர்பான பயிற்சிகள்	36
7	கேகாலை	07/28	புகுனுவல விகாரை	காலான் வளர்ப்பு தொடர்பான பயிற்சிகள்	35
8	மாத்தறை	07/24	ஊருமுத்த விகாரை	ஆர் எஸ்.எஸ். இல 01 இறப்பர் சீட் உற்பத்தி தொடர்பான பயிற்சிகள்	36
9	கேகாலை	07/24	திரு. கெஹெல்பனல்லதித் குமாரவின் புகையிடும் அறைக்கு அருகாமையில்	ஆர் எஸ்.எஸ். இல 01 இறப்பர் சீட் உற்பத்தி தொடர்பான பயிற்சிகள்	60
10	களுத்துறை	07/29	ஹெடிகல்ல விபுலசிரி விகாரை	இறப்பர் பயிர்ச்செய்கை, பால் வெட்டுதல் மற்றும் விஞ்ஞான ரீதியாக பசளையிடும் முறை தொடர்பிலான பயிற்சிகள்	28
11	மொணராகலை	07/28	தொரப்பஉவ சமூக நிலையம்	இறப்பர் பயிர்ச்செய்கை, பால் வெட்டுதல் மற்றும் விஞ்ஞான ரீதியாக பசளையிடும் முறை தொடர்பிலான பயிற்சிகள்	54
12	கேகாலை	07/28	சேலவ ரஜ மஹா விகாரை	ஆர் எஸ்.எஸ். இல 01 இறப்பர் சீட் உற்பத்தி தொடர்பான பயிற்சிகள்	53
13	கேகாலை	08/04	தல்கஹதெனிய சங்க சமூக நிலையம்	ஆர் எஸ்.எஸ். இல 01 இறப்பர் சீட் உற்பத்தி தொடர்பான பயிற்சிகள்	41

தொ. இல	மாவட்டம்	திகதி	இடம்	பயிற்சிகள்	உறுப்பினர் எ/கை
14	கேகாலை	07/28	எபிடிகல சங்க மண்டபம்	ஆர் எஸ்.எஸ். இல 01 இறப்பர் சீட் உற்பத்தி தொடர்பான பயிற்சிகள்	63
15	கேகாலை	07/31	வெரெல்லஹென புகையிடும் அறைக்கு அருகாமையில்	ஆர் எஸ்.எஸ். இல 01 இறப்பர் சீட் உற்பத்தி தொடர்பான பயிற்சிகள்	61
16	களுத்துறை	08/10	படஹென துருசவிய சங்க தவிசாளரின் வீட்டில்	ஆர் எஸ்.எஸ். இல 01 இறப்பர் சீட் உற்பத்தி தொடர்பான பயிற்சிகள்	44
17	மாத்தறை	08/14	தீபாவிட சங்க மண்டபம்	ஆர் எஸ்.எஸ். இல 01 இறப்பர் சீட் உற்பத்தி தொடர்பான பயிற்சிகள்	36
18	காலி	08/25	பண்டாரநாயகபுர சந்துன் துருசவிய சங்க உறுப்பினர் வீட்டில்	ஆர் எஸ்.எஸ். இல 01 இறப்பர் சீட் உற்பத்தி தொடர்பான பயிற்சிகள்	26
19	கேகாலை	08/27	பொல்கஸ்வத்த விகாரை	இறப்பர் பயிர்ச்செய்கை, பால் வெட்டுதல் மற்றும் விஞ்ஞான ரீதியாக பசளையிடும் முறை தொடர்பிலான பயிற்சிகள்	47
20	இரத்தினபுரி	08/31	சிரி சுமேத கொக்கோவிட சமூக நிலையம்	காலான் வளர்ப்பு தொடர்பான பயிற்சிகள்	38
21	கேகாலை	08/28	நிவுன்எல்ல துருசவிய சங்க உறுப்பினரின் புகையிடும் அறைக்கு அருகாமையில்	ஆர் எஸ்.எஸ். இல 01 இறப்பர் சீட் உற்பத்தி தொடர்பான பயிற்சிகள்	61
22	கேகாலை	08/31	திக்எல்ல துருசவிய சங்க உறுப்பினரின் புகையிடும் அறைக்கு அருகாமையில்	இறப்பர் பயிர்ச்செய்கை, பால் வெட்டுதல் மற்றும் விஞ்ஞான ரீதியாக பசளையிடும் முறை தொடர்பிலான பயிற்சிகள்	59
23	மொணராகலை	09/03	மீகஹயாய சமூக நிலையம்	காலான் வளர்ப்பு தொடர்பான பயிற்சிகள்	38
24	இரத்தினபுரி	08/31	பனாவல விகாரை	இறப்பர் பயிர்ச்செய்கை, பால் வெட்டுதல் மற்றும் விஞ்ஞான ரீதியாக பசளையிடும் முறை தொடர்பிலான பயிற்சிகள்	41
25	இரத்தினபுரி	09/03	மகிந்தாராம விகாரை	இறப்பர் பயிர்ச்செய்கை, பால் வெட்டுதல் மற்றும் விஞ்ஞான ரீதியாக பசளையிடும் முறை தொடர்பிலான பயிற்சிகள்	67
26	கேகாலை	08/28	விகாரை	ஆர் எஸ்.எஸ். இல 01 இறப்பர் சீட் உற்பத்தி தொடர்பான பயிற்சிகள்	60
27	அம்பாந்தோட்டை	08/28	வீரகெடிய துருசவிய சங்கத்தில்	தேனீ கட்டுப்பாடு தொடர்பான பயிற்சிகள்	25

தொ. இல	மாவட்டம்	திகதி	இடம்	பயிற்சிகள்	உறுப்பினர் எ/கை
28	கேகாலை	09/02	பலமுரே ஸ்ரீ மகிந்த சங்க மண்டபம்	ஆர் எஸ்.எஸ். இல 01 இறப்பர் சீட் உற்பத்தி தொடர்பான பயிற்சிகள்	49
29	குருநாகல்	08/31	வதாவ விகாரை	ஆர் எஸ்.எஸ். இல 01 இறப்பர் சீட் உற்பத்தி தொடர்பான பயிற்சிகள்	58
30	கேகாலை	09/18	மலவிட துருசவிய சங்க திரு. ஜயதிபகவின் புகையிடும் அறைக்கு அருகாமையில்	ஆர் எஸ்.எஸ். இல 01 இறப்பர் சீட் உற்பத்தி தொடர்பான பயிற்சிகள்	59
31	அம்பாந்தோட்டை	9/22	வீரகெடிய துருசவிய சங்க உறுப்பினரின் வீட்டில்	காலான் வளர்ப்பு தொடர்பான பயிற்சிகள்	18
32	அம்பாந்தோட்டை	9/24	வெலிபிடிய சமூக நிலையம்	காலான் வளர்ப்பு தொடர்பான பயிற்சிகள்	15
33	இரத்தினபுரி	12/09	பனாவல விகாரை	ஆர் எஸ்.எஸ். இல 01 இறப்பர் சீட் உற்பத்தி தொடர்பான பயிற்சிகள் மற்றும் புதிய தொழில்நுட்பத்திலான புகையிடும் அறைகள் நிர்மாணிப்பு தொடர்பான பயிற்சிகள்	62
34	இரத்தினபுரி	12/21	கிரிஎல்ல ஆலோசனை சேவை திணைக்களம்	இறப்பர் பயிர்ச்செய்கை, பால் வெட்டுதல் மற்றும் மீளாய்வு தொடர்பான பயிற்சிகள்	51

துருசவிய நிதியத்தின் மூலம் வளப்பங்கீடு செய்தல்

உயர் தரத்திலான இறப்பர் சீட் உற்பத்தி செய்யும் பொருட்டு இறப்பர் ரோல் வழங்கல் இச்செயற்றிட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தினால் அனுமதிக்கப்பட்டுள்ள தரத்திற்கமைய கையால் இயக்கக்கூடிய மற்றும் எந்த இடத்திலும் மிகச் சிறிய இடத்திலும் பயன்படுத்தி இந்த இறப்பர் ரோல்களை பொருத்திக் கொள்ள முடியும். சிறிய அளவிலான விவசாயிகளுக்கு பாரம்பரிய இறப்பர் ரோல் ஜோடிகள் மூலம் பாரிய அளவிலான வேலைகளை செய்யக்கூடிய அதேவேளை, 2020 ஆம் வருடத்தில் துருசவிய சங்கங்களுக்கு 88 ரோல் ஜோடிகள், 1600 இயற்கை இறப்பர் காலணிகள் மற்றும் 1600 தலையில் அணியக் கூடிய மின்விளக்குகள் துருசவிய சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

துருசவிய நிதியம்

இறுதி கணக்கறிக்கை – 2020

துருசவிய நிதியம்

2020.12.31 திகதிக்கு நிதி நிலைமைக்கூற்று

சொத்து	குறிப்பு	2020 (ரூபா)	2019(ரூபா)
அசையா சொத்து			
ஆதன விபரம் மற்றும் உபகரணங்கள்	**1**	2,440,763.89	2,801,241.30
		2,440,763.89	**2,801,241.30**
அசையும் சொத்துக்கள்			
நிதி மற்றும் நிதிக்கு சமமானவை	**2**	16,267,181.18	9,701,721.29
வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்க வேண்டியவை	**3**	2,320,845.88	2,061,576.49
கையிருப்பு	அட்டவணை-**1**	2,386,983.21	642,768.80
திரண்ட வருமானம்	**4**	-	9,415,820.62
		20,975,010.27	**21,821,887.20**
மொத்த சொத்துக்கள்		**23,415,774.15**	**24,623,128.49**
பொறுப்புக்கள்			
நடைமுறை பொறுப்புக்கள்			
திரண்ட செலவு	**5**	288,228.00	8,263,913.38
கூடுதலாக செலுத்திய சம்பளம்		-	72,000.00
பணிக்குழாம் நலன்புரிக்காக		(2,500.00)	-
கணக்காய்வு கட்டண ஒதுக்கீடு		1,425,000.00	725,000.00
		1,710,728.00	**9,060,913.38**
நடைமுறையற்ற பொறுப்புக்கள்			
பணிக்கொடை கொடுப்பனவு ஒதுக்கீடு	அட்டவணை-**2**	9,087,342.68	6,773,651.31
மொத்த பொறுப்புகள்		**10,798,070.68**	**15,834,564.69**
மொத்த தேறிய சொத்துக்கள்		**12,617,703.47**	**8,788,563.80**
தேறிய சொத்துக்கள்/உரித்துக்கள்			
செஸ் நிதியம்		**27,000,000.00**	**27,000,000.00**
துருசவிய நிதியம்		**(15,650,314.53)**	**(19,474,854.20)**
அங்கத்துவ பணம்		**1,268,018.00**	**1,263,418.00**
தேறிய சொத்துக்கள்/உரித்துக்கள்		**12,617,703.47**	**8,788,563.80**

அரசதுறை கணக்கீட்டு தரங்களுக்கு அமைய இந்த நிதி கூற்று தொகுதி தயாரிக்கப்பட்டுள்ளது. (SLPSA)

கணக்காளர்	**பணிப்பாளர்**	**தவிசாளர்**
ஜே.ஜீ.ஜீ பண்டார	கலாநிதி எஸ்.டப்ளிவ்.ஆர்.கே.சில்வா	வீ.லொகுநாராங்கொட

06 ஆம் பக்கத்திலிருந்து 14 ஆம் பக்கம் வரை காட்டப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கை மற்றும் குறிப்புகள் நிதிக்கூற்றின் இன்றியமையாத பகுதிகளாகும். இந்த நிதிக்கூற்றை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பில் பணிப்பாளர் சபை முழுமையாக பொறுப்பேற்கிறது. பணிப்பாளர் சபை சார்பில் கையொப்பம் இட்ட பணிப்பாளர்களால் இந்த நிதிக்கூற்று அங்கீகரிக்கப்படுகிறது.

பணிப்பாளர்	பணிப்பாளர்
ஜீ.டி.எஸ். பெரோரா	ஜீ.கே.ஆர்.ப்ரியங்கர
(பிரதம கணக்காளர் - பெருந்தோட்ட அமைச்சு)	(பணிப்பாளர் சபை அங்கத்தவர்)

2020.12.31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி செயலாற்றுகை கூற்று

	குறிப்பு	2020 ரூபா	2019 ரூபா
வருமானம்			
அரச மானியம்	**6**	38,156,250.00	46,561,250.00
பால் வெட்டும் திட்ட மானியம்		4,964,852.22	7,782,496.82
புகைவீட்டு திட்ட மானியம்		10,705,208.73	6,189,869.80
ஏனைய வருமானம்	**7**	744,543.60	1,154,235.73
கூட்டு பதப்படுத்தல் நிலைய திட்ட மானியம்			447,304.00
மொத்த வருமானம்		**54,570,854.55**	**62,135,156.35**
செயற்பாட்டு செலவு			
சம்பளம், வேதனம் மற்றும் ஊழியர் நன்மைகள்	**8**	19,769,494.83	17,776,020.12
பயண கொடுப்பனவு	**9**	169,787.78	736,228.92
வழங்கல் மற்றும் நுகர்வு செலவு	**10**	8,743,564.57	6,759,548.21
தேய்வு செலவு		425,654.51	238,667.87
அபிவிருத்தி செலவு	**11**	7,548,120.22	19,816,265.18
பால் வெட்டும் திட்ட செலவு		3,226,292.33	7,707,762.04
புகைவீட்டு திட்ட மானியம்		10,792,836.01	6,190,908.80
கூட்டு பதப்படுத்தல் நிலைய மேம்படுத்தல் திட்ட மானியம்		240,127.00	128,454.40
ஏனைய செலவு	**12**	432,688.95	311,326.44
மொத்த செலவு		**51,348,566.20**	**59,665,181.99**
காலப்பகுதிக்கான மிகை (பற்றாக்குறை)		**3,222,288.35**	**2,469,974.36**

துருசவிய நிதியம்

2020.12.31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான திரட்டிய மாற்றங்கள் தொடர்பான கூற்று

	உரிமையாளர்களின் சுமத்தப்பட்ட கட்டுப்பாட்டு அலகுகள்					தேறிய சொத்துக்கள் / பொறுப்புகள் ரூபா
	மூலதன பங்களிப்பு / நிதியம் ரூபா	ஏனைய மானியங்கள் மற்றும் ஒதுக்கங்கள்	அங்கத்துவ கட்டணம் மற்றும் நிர்வாக கட்டணம் ரூபா	மீண்டெழும் ஒதுக்கங்கள்	திரண்ட தேய்வு மிகை / பற்றாக்குறை ரூபா	
2017.12.31 திகதியில் மீதி	**27,000,000.00**	**-**	**1,231,303.00**	**-**	**(19,976,336.40)**	**8,254,966.60**
ஆரம்ப மீதியை சீராக்கல்	-	-	-	-	**(1,269,874.73)**	**(1,269,874.73)**
அங்கத்துவ பண தேறிய வருமானம் 2018	-	-	**9,420.00**	-	-	**9,420.00**
காலப்பகுதிக்கான மிகை பற்றாக்குறை 2018	-	-	-	-	**234,946.96**	**234,946.96**
2018.12.31 திகதியில் மீதி	**27,000,000.00**	-	**1,240,723.00**	-	**(21,011,264.17)**	**7,229,458.83**
ஆரம்ப மீதி சிராக்கல்	-	-	**22,695.00**	-	-	**22,695.00**
அங்கத்துவ பண தேறிய வருமானம் 2019	-	-	-	-	**2,469,974.36**	**2,469,974.36**
காலப்பகுதிக்கான மிகை பற்றாக்குறை 2019					**(933,564.39)**	**(933,564.39)**
2019.01.01 திகதியில் மீதி	**27,000,000.00**	-	**1,263,418.00**	-	**(19,474,854.20)**	**8,788,563.80**
அங்கத்துவ பண தேறிய வருமானம் 2020	-	-	**4,600.00**			**4,600.00**
காலப்பகுதிக்கான மிகை பற்றாக்குறை 2020	-	-	-		**3,222,288.35**	**3,222,288.35**
முந்திய கால சீராக்கல்	-	-	-		**602,251.32**	**602,251.32**
2020.12.31 திகதியில் மீதி	**27,000,000.00**	-	**1,268,018.00**	-	**(15,650,314.53)**	**12,617,703.47**

துருசவிய நிதியம்			
2020.12.31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான பணப்பாய்ச்சல் கூற்று			
	2020 ரூபா		**2019 ரூபா**
